RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd223S131

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Cultural Movements that are Intertwined with the Lives of Tamils

# தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த பண்பாட்டு அசைவுகள்

**A. Muthusivagami [a,*]**

[a] Department of Tamil, Mahalakshmi College of Arts and Sciences for Women, Paruthipattu, Avadi. Chennai-600110, Tamil Nadu, India.

*Corresponding author Email: Muthusivagami19@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S131

Received: 13-04-2022; Revised: 28-07-2022; Accepted: 03-08-2022; Published: 20-08-2022

**Abstract:** The reason why the cultural values of the Tamils who taught the world the life of the human race is still imprinted all over the world today is because of the culture of the Tamil race with great thoughts and high thoughts planted in this cultural sand of Tamil society. Through this article, we can see that even though the cultural movements of the Tamils have undergone small changes over the generations in the name of civilization, the deep-rooted culture planted in this cultural soil by our forefathers is intertwined with our lives. The summary of this study is to emphasise that the Tamils' hospitality, marriage system, belief in God, the dignity of women, caste, religion, race, color, and language by creating differences among us by saying various divisions of Tamils, who have recorded the cultural footprints of unity to the human race, are intertwined with the life of the Tamils without any temptation even today.

**Keywords:** Cultural Movements, Marriage, Femininity, Hospitality

**Language:** **Tamil**

## முன்னுரை

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்" என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகின்றது தமிழ் என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்ற பொருள்களிலும் நம் முன்னோர்கள் வழங்கியுள்ளனர். தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும்,தமிழருக்கும் உண்டு காரணம் மனிதன் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியலை கற்றுக்கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதும் தடம் பதித்து இருக்கின்றது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் நம் சமூகத்தில் விதைத்து சென்று இருக்கிறது பண்பட்ட மண்ணில்தான் செடிகளும் கொடிகளும் துளிர்விடும் அதுபோல இந்த சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல பண்பாடு இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இந்த உலகுக்கு கற்றுக் கொடுத்து இருக்கின்றது. நாடாண்ட மன்னன் முதல் குடிசை வாழும் சாதாரண குடிமகன் வரை குலம் காக்கும் பண்பாட்டை கட்டிக்காத்து பார் போற்ற வாழ்ந்த இனம் நம் தமிழ் இனம். இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இணையம் வரைக்கும் தமிழரின் பண்பாடு பதிவுகள் தன்னை அடையாளப்படுத்துகிறது. நாகரீகம் என்ற பெயரில் தலைமுறை கடந்து விட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் நம் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து கொண்டிருக்கின்றது. என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நாம் காணலாம்.

## பண்பாடு விளக்கம்

பண்படு என்னும் தமிழ்ச் சொல்லில் இருந்தே பண்பாடு தோன்றியது பண்பாடு என்பதற்கு செம்மைப்படுத்த அல்லது சீர்படுத்துதல் என்பது பொருள். பண்படுத்துதல் என்னும் சொல்வழக்கு

நிலத்தைப் பண்படுத்தும் உள்ளத்தை பக்குவப்படுத்துவதற்கும் பயன்படுகின்றது கல்ச்சர் என்ற லத்தீன் சொல்லுக்கு சூழலுக்கு ஏற்ற வளர்ச்சி என்று பொருள். இச் சொல்லின் திரிபே கல்ச்சர் என ஆங்கிலத்தில் கூறப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1937 இல் கல்ச்சர் என்னும் சொல்லுக்கு இணையாக பண்பாடு என்னும் தமிழ்ச் சொல்லை டி கே சிதம்பரநாதன் ஆர் பயன்படுத்தியதாக பேராசிரியர் எஸ் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கூறுகின்றார். பண் படுவது பண்பாடு. மனித உயிர்களில் இருந்து வேறுபடுத்தி தமக்குரியபண்பினையும் உயர்வையும் எடுத்தியம்புகின்றது. சிந்தனை வெளிப்பாடாக இயங்குகின்றது பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல். என்கிறது கலித்தொகை. கலாச்சாரம் என்ற சொல்லையும் பண்பாட்டோடு தொடர்புபடுத்த முடிகின்றது. பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தின் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கவழக்கங்களும் அடங்கும் முழுமை தொகுதி ஆகும் என்று பக்தவச்சல பாரதி கூறுகின்றார். பண்பாடு என்பது பண்பட்ட பக்குவப்பட்ட சீரான நேரிய வழியில் செல்லும் ஒழுக்கவியல் கோட்பாடாகும். பண்பாடு என்னும் சொல்லை நம் முன்னோர்கள் பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளனர், பண்புடையார் பட்டுண்டு உலகு என்று கூறுகின்றது பண்பாடு உடையோரை சான்றோர் என்றும் ஒழுக்கம் உடையோர் என்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பண்பாடு என்பது ஒரு இனத்தாரின் கொள்கை, கோட்பாடு, நோக்கம், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், சமூக சட்டங்கள், சமய வழிபாட்டு நெறிமுறைகள், களவு, கற்பு, அகத்திணைகள் புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியல் அமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், விளையாட்டுகள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய பண்பாடாகும்.

## பண்பாடு குறித்து அறிஞர்களின் வரையறைகள்

பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது சமயம் பாரம்பரியம் பொருளாதாரம் ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது என்று விவேகானந்தர் கூறுகின்றார். பண்படுவது பண்பாடு பண்படுதல் என்பது சீர் படுதல் அல்லது திருந்துதல் திருந்திய நிலத்தை பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலம் என்றும் திருந்திய தமிழை பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தை பண்பட்ட உள்ளம் என்றும் சொல்வது வழக்கம் என்கிறார் தேவநேய பாவாணர். மனிதனுடைய தேவைகளையும் மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள உருவாக்கிய கருவி என்கிறார் சிசி நார்த், தமிழர்கள் அனைவராலும் போற்றத்தக்க வகையில் காணப்படும் பண்பாட்டு கூறுகளை அறிந்து கொள்வதற்கு பல சான்றுகள் உதவுகின்றன சிறப்பு மிக்கவர்கள் தமிழர்கள் பண்பாட்டு சிறப்பு மிக்கவர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடந்த நிகழ்வுகளை அறிந்துகொள்ள இலக்கியங்கள் துணைபுரிகின்றன நம் பண்பாட்டு கூறுகளின் சிறந்த வாயில்களாக காலக் கண்ணாடியாக விளங்கும் இலக்கியங்களின் வழி பண்பாட்டு சுவடுகளை அறியலாம்.

## விருந்தோம்பல்

தலைசிறந்த பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் வீட்டிற்கு வரும் உறவினர்களை மட்டுமல்ல முகம் தெரியாத யாராக இருந்தாலும் அவர்களை அன்போடு உபசரித்து முகம் மலர உணவளித்து உள்ளன்போடு வழியனுப்பும் வாழ்வியலை தருகிறது தமிழரின் பண்பாட்டு கோட்பாடு காலம் காலமாக இப் பண்பாட்டை கட்டி காத்து வருவது நம் தனிச் சிறப்பு இதிலும் ஒரு படி மேலே சென்று குடும்பத் தலைவியின் கடமைகளுள் ஒன்றாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது நமது பண்பாடு விருந்தோம்பலை இல்லத்தரசியின் கடமையாக வேறு எந்த இனமும் நாடும் பண்பாடும் சுட்டிக் காட்டவில்லை இதனை தமிழ் இலக்கியங்கள் தான் பதிவு செய்துள்ளனர் இவ்வுலகம் இருக்கும் வரை வரலாறு சொல்லும் தமிழரின் விருந்தோம்பல் பண்பு இணையாக நாம் எதையும் சொல்லிவிட முடியாது செய்து விடவும் முடியாது அந்த அளவிற்கு தமிழர்களின் விருந்தோம்பல அனைவராலும் போற்றுதற்குரிய பண்பாக திகழ்கின்றது மனிதனுக்கு மனிதன் மட்டும் உதவுவது ஈகை அல்ல படர்ந்து செல்லும் செடி கொடிகளுக்கும் கூட உற்றுழி உதவி செய்து தமிழ் பண்பாட்டை உலக அரங்கில் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் சென்றது தமிழினம். குளிரில் நடுங்கிய மயிலுக்கு போர்வை கொடுத்தான் பேகன் பற்றிப் படர கொம்பு இல்லாமல் கிடந்த கொடிகளுக்கு தான் வந்த தேரினை விட்டு சென்றவன்பாரி .இ தேபோல்

நீண்டநாள் உயிர்வாழும் நெல்லிக்கனி அதியமானுக்கு கொடுத்து சென்றாள் அவ்வை .இப்படி நாடு, நகரம், பணம், காசு இத்தனையும் அள்ளி அள்ளி கொடுத்த ஈகை எனும் ஈர மனதினை இலக்கியங்கள் இன்றளவும் போதித்து வருகிறது விருந்தோம்பும் பண்பிற்கு மிகச்சிறந்த உதாரணமாக கரிகாலன் பெருவளத்தான் கூறலாம் தன்னை நாடி வந்தவர்களுக்கு முல்லை புகை போன்ற இடைமுறியாத அரிசிச் சோற்றையும் வெஞ்சனமாகிய பொரிகறிகளையும் பிறவற்றையும் கழுத்து வரையில் வந்து நிரம்புமாறு உண்டனர் இவ்வாறு இரவும் பகலும் இறைச்சியை மாறி மாறி உண்பதால் பொருநரின் பற்கள் கொல்லையை உழுத கொழுவைப் போன்று முனை மழுங்கின.இவ்வாறு சங்க இலக்கியங்கள் விருந்தோம்பும் பண்பு பறைசாற்றுகின்றன.இந்த விருந்தோம்பும் பண்பு இன்றளவும் நமது பண்பாட்டில் எச்சமாக திகழ்வதை நாம் காணலாம்.

## திருமண முறை

தொன்மங்களின் தொடர்ச்சியாகத திகழ்வது தமிழர்களின் திருமண முறை. திருமணத்தின்போது புதுமணல் பரப்பி செம்மண் பூசி மங்கல பெண்கள் சூழ நடந்தது எனும் செய்தி

"தருமணல் தாழப்பெய்து

இல்பூவல் ஊட்டி எருமைப்பெடையோடு" (Balasubramanian, 2019)

குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் காலத்தில் திருமணம் செய்யும் மரபினைச் கொண்டிருந்தனர். "வேங்கை விரிவிடம் நோக்கி மன்ற வேங்கை மணநாட் பூத்த மணியேர் அரும்பின் பொன் வீ" என்னும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றது (Venkataraman, 2006). தமிழரின் திருமண முறையை எடுத்தியம்பும் பண்பாட்டு பெட்டகமாக அகநாற்றின் இரு பாடல்கள் திகழ்கின்றது.

"தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி

மனை விளக்குறத்து மாலை தொடரி

கோள் கால் நீங்கிய கொடு வெண்திங்கள்)"

"பருமணமுழவொடு பரூஉப் பணை இமிழ்

வதுவை மண்ணிய மகளிர் விதப்புற்றும்" (Venkataraman, 2006)

மணப்பந்தலில் புதுமணல் பரப்பப்பட்டிருந்தது. பந்தலில் மறை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. காலை நேரம் மாற்று இருந்தது. ஒரு புறம் உணவு குவியல் கிடந்தது. முது பெண்டிர் உச்சியில் நீர் குடம் ஏந்தி முன்னவும் பின்னவும் நடக்கவும் பல பிள்ளைகளைப் பெற்ற மங்கல பெண்கள் கூடி கற்பு நெறியில் என்றும் பிறழாமல் நல்லறங்களை செய்து கணவன் விரும்பத்தக்க மனைவியாகுக என்று வாழ்த்தினர் குறந்தொகையிலும் மனப்பொருத்தம்என்பதன் அடையாளமாக யாரும் ஞாயும் யாரா கியரோ எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர் (குறுந் என்ற முறையிலே செம்புலப் பெயல்நீர் போல ஒன்று சேர்ந்திருக்கின்றனர். தமிழனின் திருமண முறையில் மந்திரங்கள் இல்லை எரிஓம்பல் இல்லை. அம்மி மிதித்தல் இல்லை தீவலம் இல்லை அருந்தி காட்டல இல்லை. புரோகிதர் இல்லை. கோத்திரம் இல்லை தமிழர்களின் திருமண முறை எந்த மூட பழக்கத்திற்கும் ஆட்பட்டு இருக்கவில்லை.அன்றைய தமிழர்களின் திருமண முறை எளிமையாக நிகழ்ந்தது இடைக்காலத்தில் தமிழ் மரபுக்கு மாறான முறை தமிழரிடம் புகுந்தது வரதட்சனை தமிழ்ச் சொல்லே இல்லாத இந்த சொல் தமிழனை ஆட்டிப்படைத்தது தமிழரின் பழக்கவழக்கங்களில் மணமுறையில் சிறிய மாற்றங்கள் வந்தாலும் சங்க காலத் தமிழரின் வழித்தோன்றலாக ஆழ்நிலை அசைவுகள் தமிழரின் திருமண முறையில் இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன கொரானாகாலத்தில் கூட பல திருமணங்கள் எளிமையான முறையில் நல்ல நாளில் நடந்து இருப்பதை நாம் காணலாம்.

## தெய்வ நம்பிக்கை

சங்ககாலம் முதற்கொண்டேதமிழர்களிடம் தெய்வ தம்பிக்கை குடி கொண்டிருந்தது உலகம் கடவுளால் காக்கப்படுகின்றது என்ற உணமையை சேவல் அம் கொடியோன் காப்ப ஏம் வைகல்

எய்தின்றால் உலகமே (Venkataraman, 2006) என்ற குறந்தொகைப் பாடல் விளக்குகின்றது. பழந்தமிழ் மக்களின் வாழ்நிலைப் பண்பாடு மேல்நிலையில் இருந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கன் மெய்ப்பிக்கின்றன மக்களின் வாழ்வியலின் நல்ல செயல்களைத் தொடங்கும் முன் தெய்வங்களை வழிபாடு செய்த பின்னரே தொடங்க வேண்டும். எனும் மரபு இன்றளவும் பேணிப் பாதுகாக்க ப்பட்டு வருகின்றது. நிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் தெய்வங்கள் உறைகின்றன. எனவே வீடு கட்டவிருக்கும் நிலத்தில் முளை அறைந்து கயிறு கட்டி கயிற்றின் நிழல் வழியாகத் திசைகளைக்குறித்து அந்த திசையிலுள்ள தெய்வங்களைக் கண்டறிந்து வழிபாடு செய்து அதன் பின்னரே வீடுகட்டத் தொடங்க வேண்டும் என்பது பழந்தமிழரின் நம்பிக்கை த னை நூலறி புலவர் நுண்னிதிற் கயிறிட்டு தேயம் கொண்டு தெய்வம் நோக்கி பெரும்பெயர் என்கின்றது மன்னர்க்கு ஓம்பனை வகுத்து நெடுநல் வாடை இந்த பண்பாட்டு அசைவு இன்றளவும் நம் பண்பாட்டில் நாம் காணலாம்.

## மகளிரின் மாண்பு

சங்ககாலப் பெண்கள் தினைப்புலம் பேணும் காவல் மங்கையாக புலியை முறத்தால் விரட்டும் வீரம் செறிந்த பேதையாக, போர்க்களத்தில் தன் கணவன், சகோதரன் தந்தை இறந்துபட்ட போதிலும் மகனின் கையினில் வீரவாளினைக்கொடுத்து வழியனுப்பி வைக்கும் நெஞ்சுரம் மிக்க அரிவையாய், ஔவையார் போன்று கல்வி அறிவினில் சிறப்புடையவர்களாகத் திகழ்ந்தனர். இடைக் காலத்தில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டாலும் இன்று சங்ககால மளிரின் வழித் தோன்றல் தான் நாங்கள் என்று இக்காலத் தமிழச்சிகள் பல துறைகளிலும் தங்களை புதுப்பித்து வருகின்றனர். இவ்வாறு நமக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து சென்ற சங்ககால மகளிரின் இயல்புகளில் சில பண்புகள் தலைவன் தலைவி இருவரும். அன்புடையவர்களாகத் திகழ்ந்தனர். தலைவி தலைவனுக்கு தாம்பூலம் கொடுத்தல் மரபு அம்மென்திரையலொடு அடைக்காய் ஈத்த மையிர் ஓதி (சிலம்பு) சிலப்பதிகாரம் கூறுகின்றது. தலைவன் ஒருத்தன் தாம்பூலம் கொடுத்து ஒரு பெண் பெற்றுக்கொண்டார் அவள் அவனுக்கு இசைந்தாள் என்பது கருத்து. கையால் தாம்பூலம் தின்றயோ (Balasubramanian, 2019) என்னும் வரிகள் இம்மரபை விளக்குகின்றன. இயற்கையோடு இயைந்த மகிழ்வான வாழ்க்கையை சங்ககால மகளிர் வாழ்ந்தனர் - பழங்காலத்தில கடற்கரையில் மணலாற் பாவை செய்து விளையாடுவர். மகளிர் பாவையோடு குரவையாடிய செய்தி அகநானூற்றில் விளக்கப்பட்டுள்ளது. இந்தப் பாவை யாடல் மகளிர் மட்டுமே ஆடும் தைந்நீராடலாக மாற்றம் பெற்றுள்ளன என்று சங்கநூல்கள் காட்டுகின்றன. நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த வண்டற்பாவை இவ்வாறு சங்க மகளிரின் வாழ்வு இயற்கை யோடு ஒன்றிணைந்த மகழ்ச்சியான வாழ்வாக இருந்தது. இந்த நீராடல் பண்பாட்டசைவு பாதுகாக்கப்பட்டு இன்றளவும் வருகின்றது.

## இன்றைய தமிழர்களின் பண்பாடு

தமிழ்நாட்டிலும் நகரங்களில் இன்று தூய தமிழ் பண்பாட்டின் அடிநிலைக்கூறுகளில் பெறும் மாறுதல்கள் இல்லாவிட்டாலும் பண்பாட்டு கூறுகளில் சில சிதைவுகள் இருக்கவே செய்கின்றன. திண்ணைகள் இல்லாத வீட்ட மைப்பு வாசலில் குரோட்டன்ஸ் வளர்க்கும் நாகரிகம் பக்கத்து வீட்டுக்காரர்களைப் பற்றி ஏதும் தெரியாத அடுக்குமாடிக் கட்டமைப்பு சூழல்கள். மக்கட் தொகை மிகுதியாக பல்வேறு மாறுபட்ட சூழல் விருந்தோம்பல் என்பது இந்த நவயுக காலத்தில் அதிகப்படியாக வரவேற்பறையில் தேநீர் என்ற அளவில் நெருக்கான உறவுகள் கூட கத்தரிக்கப்படுகின்றன திருமண முறைகளில் பல்வேறு மாறுதல்கள் என்று இன்றைய தமிழர்களின் வாழ்வியலில் பல்வேறு விதமான மாறுதல்கள் நிகழ்ந்தாலும். மக்களின் பண்பாட்டு கூறுகளில் வாழ்வியலில் எவ்வித சலனமுமில்லாமல் நிதர்சனமாக சங்க இலக்கிய மரபுகள் பண்பாட்டுக் கூறுகள் அமைதியாக எந்த சலனமும் இல்லாமல் நிதர்சனமாக இன்றளவும் இருக்கத்தான் செய்கின்றது என்பதை இயற்கைப் பேரழிவுகள் போன்ற இடர்ப்பாடான காலங்களில் ஈகைமரபுடன் பல்வேறு நல்ல உள்ளங்கள் செயல்படுவதை நம்மால் கண்கூடாக காண இயலும்.

## தீதும் நன்றும் பிறர்தர வாரா

தீதும் நன்றும் பிறர்தர வாரா எனும் உயர்ந்த பண்பாட்டை உலகுக்கு சொல்லிய இனம் நம் தமிழினம். நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும். கெட்டது நினைத்தால் கெட்டதே நடக்கும்; இது தான் நமது வாழ்வியலின் நிதர்சனமான உண்மை. நமக்கு நடக்கும் நன்மை தீமைக்கு பிறரைக் குறை கூறுதல் தவறு. அது உன்னிடம் இருந்து தான் வெளிப்படுகின்றது என்ற உயரிய சிந்தனையை தமிழ்ப்பண்பாடு தான் கற்றுக்கொடுத்தது. ஒழுக்கத்தோடு வாழவேண்டும் எனும் உயரிய கொள்கையை எடுத்துச் சொல்லி இருக்கிறது. சமுதாயம், நாடு வளம் பெற ஒவ்வொரு தனிமனிதனும் ஒழுக்கத்தோடு வாழ வேண்டியது அத்தியாவசியம். மேற்கத்திய நாடுகளில் இதுபோன்ற பண்பாட்டுக் கூறுகளும் சொல்லப்படவும் எழுதப்படவும் இல்லை. ஆனால் உலகம் போற்றுதலுக்குரிய இது போன்ற உயர்வான பண்பாட்டுக் கருத்துக்களை உலகறியச் செய்தது தமிழ்ப் பண்பாடு ஆகும்.

## யாவரும் கேளிர்

ஜாதி, மதம், இனம், என பல்வேறு பிரிவினைகள் சொல்லி நமக்குள் வேற்றுமையை ஏற்படுத்தி ஒற்றுமையான வாழ்க்கைக்கு ஊறு விளைவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழன் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று ஒற்றுமை வாழ்க்கைக்கு தன் பண்பாட்டினை பதிவு செய்து சென்றிருக்கிறான். உலகில் உள்ள அனைத்து நாடும் எனது நாடே, எல்லா ஊரும் எனது ஊரே. உறவினர்களே என்று. இப்பண்பாட்டுக் கோட்பாட்டை நாம் அனைவரும் பின்பற்றி வந்தால் நமக்குள் சண்டைகளும், முரண்பாடுகளும் நம்மை அண்டாது. வரலாறு போற்ற வாழும் வாழ்க்கை நம் வசமாகும். கோட்பாட்டினை வேறு எந்த நாடும், மொழியும் பதிவு செய்யவில்லை. தலைமுறைகள் பல கடந்து அறிவியலில் பல நிலைகளை நாம் தொட்டுவிட்டோம் ஆனாலும் தமிழரின் பாண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் நீட்சியாக தொடர்ந்துகொண்டே இருக்கிறது. உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரைக்கும் பண்பாடு போற்றப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் வாழ்வியலின் ஒவ்வொரு நகர்விலும் பண்பாடு போற்றப்படுகின்றது. உயர்வான கருத்துக்களையும், உன்னத வாழ்வியல் நோக்கங்களையும் தனிமனித ஒழுக்கத்தையும் பண்பாடு என்னும் நோக்கில் கொடுத்த தமிழரின் தலை சிறந்த நாகரீக வாழ்வியலை இந்த வையகம் போற்றுகிறது. வழியில் வந்து செல்லும் வழிப் போக்கர்கள் கூட அமர்ந்து செல்ல திண்ணை அமைத்து வீடுகட்டிய தமிழரின் பண்பாட்டு கோட்பாட்டை யாரும் புறந்தள்ளி விட முடியாது. இன்னும் எத்தனை காலங்கள் ஆனாலும் தமிழர் பண்பாடு தலை சிறந்து நிற்கும்.

## முடிவுரை

பழந்தமிழ் மக்களின் வாழ்நிலைப் பண்பட்டு மேன்மை நிலையில் இருந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன. பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேன் மண்புக்கு மாய்வது மண் (குறள் 996) குறளுக்கேற்ப பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் மதிப்பினை அளந்தரிய உதவும் கருவியாகத் திகழ்கின்றது. அத்தகைய பண்பாட்டு நிலையில் தனிச்சிறப்புடையவர்களாகவும், தன்னிகரற்றவர்களகவும் திரும்பவர்கள் நம் தமிழர்களே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிக ளை நடத்தும் பொழுது நல்ல நாள் பார்த்தல் மரபாக கருதப்பட்டது. விருந்தோம்பல் தமிழர்களின் தலையாய கடமையாக பேணப்பட்டு வந்துள்ளது. அறமல்லாத செயல்களைச் செய்தால் இயற்கையாக நடைபெறும் செயல்கள் நடைபெறாது நல்ல செயல்களைச் செய்வதற்கு முன் தெய்வ வழிபாடு செய்தல் போன்ற பண்பாட்டு நிகழ்வுகள் சங்க காலம் தொட்டு இன்று வரை நம்மிடம் வேரூன்றிக காணப்படுகின்றது.

## References

Balasubramanian, Ku.Ve., (2019) Kalittokai, New Century Book House, Chennai, India.

Bhakthavatsala Bharathi, S., (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Paramasivan, Tho., (2014) Vidupookal, Kalachuvadu pathippagam, Chennai, India.

Paramasivan, Tho., (2017) Panpattu Asaivukal, Kalachuvadu pathippagam, Chennai, India.

Pathippa Aasiriyar kulu, (2008) Thirukkural, superstar pathippagam, Chennai, India.

Venkataraman, Ka, Ko., (2006) Tamil ilakkiya varalaru, Kalayaga veliyedu, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

A. Muthusivagami, Cultural Movements that are Intertwined with the Lives of Tamils, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 159-164. DOI: https://doi.org/10.54392/ijmrd223S131